வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் - 45

அந்நியபாஷை,
அற்புதஅடையாளங்கள்,
தரிசனம் பார்த்தல்,
தீர்க்கதரிசனம் உரைத்தல்

Tongues, Miracles, Visions, Prophesying

Bible Research and Study Centre

வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

அந்நியபாஷை, அற்புதஅடையாளங்கள், தரிசனம் பார்த்தல், தீர்க்கதரிசனம் உரைதல்

Tongues Speaking, Miracles, Visions and Prophesying

கிறிஸ்து இயேசுவில் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே,

இன்று நாம் கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபலமாகக் கருதப்படுகிற அந்நிய பாஷை, அற்புத அடையாளங்கள், தரிசனம் பார்ப்பது மற்றும் தீர்க்கதரிசனம் உரைப்பது பற்றி தியானிக்க இருக்கிறோம்.

இது பரிசுத்த ஆவியின் வரங்கள் என்று அழைக்கப்பட்டு, இன்றைய கிறிஸ்தவ தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுவதை நாம்அதிகமாகக் காண்கிறோம். இதைக் குறித்து இப்பொழுது நாம் வாசிக்கலாம் -

1கொரிந்தியர் 12:7-11

"ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்துக்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினால் ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்"

இது பரிசுத்தஆவியின் வரங்களாகிய வெளிப்பாடுகளைக் குறித்து பேசுகிறது.

இந்த பலவகையான ***"வெளிப்பாடுகளில்"*** அந்நிய பாஷை பேசுவதும், அற்புத அடையாளங்கள் செய்வதும் குணமாக்கும் வரங்களும் பெந்தெகொஸ்தே சபை என்றழைக்கப்படுகிற கிறிஸ்தவ பிரிவின் மூலம் இன்று மிகவும் பிரபலமடைந்திருக்கிறது.

இந்த பெந்தெகொஸ்தே சபை பிரிவானது மிகவும் புதிதான கிறிஸ்தவ பிரிவாகும். இது பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு

கிபி 1890களில் துவங்கியது.

ஆனால் இங்கு நாம் கவனிக்கவேண்டிய ஒன்று உள்ளது. இன்றைய சபைகளில் வெளிப்படுகிற அந்நிய பாஷை பேசுவது மற்றும் அற்புத அடையாளங்கள் செய்வதென்பது, முதலாம் நூற்றாண்டு முதல் கிட்டத்தட்ட 1700 வருட சபை சரித்திரங்களில் காணப்படாதவைகளாகும்.

அப்படியிருக்க இந்த பரிசுத்தஆவியின் வரங்கள் திடீரென்று தோன்றியிருப்பது எதைக் குறிக்கிறது? இவைகளைக் குறித்து வேத வசனங்கள் போதிப்பது என்ன?
இவைகளைக் குறித்து ஒவ்வொன்றாகக் காணலாம்.

அந்நிய பாஷை பேசுதல்

இது "***பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளில்***" ஒன்றாகவும், பெந்தெகொஸ்தே நாளில் திடீரென்று பெற்ற பலவகையான பாஷைகளில் பேசும் வல்லமையை உள்ளடக்கியதாக (1கொரிந்12:10) வாசிக்கிறோம் -

அப்போஸ்தலர் 2:4

"அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்"

பரிசுத்தஆவியின் வெளிப்பாடான இந்த அந்நிய பாஷையில் பேசுவது பின்நாளில் அப்போஸ்தலர்கள் தாங்கள் மற்ற சீஷர்கள்மீது "***கைகளை வைத்த போது***"(அப்போஸ்தலர் 19:6) இந்த வரங்கள் மற்ற சீஷர்களுக்கும் சென்றது. ஆனால் ஆதிகால சபையில் ஆராதனை கூடுகையின்போது, "***அந்நியபாஷை***" பேசும் விஷயத்தில் சில நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததை பின்பரும் வசனத்தில் வாசிக்கிறோம்

1கொரிந்தியர் 14:27,28

"யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால் சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்"

ஆதிகால சபையில் ஆராதனைக்காக கூடிவரும்போது, அந்நிய பாஷை பேசுகிற இந்த வரத்தை வெளிப்படுத்துவதற்கு சில நிபந்தனைகளும், ஒழுங்கு முறைகளும் கடைப்பிடிப்பது அவசியமாயிருந்தது. ஒரு கூடுகையில் அந்நிய பாஷை பேசுகிறவர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் .. மூன்றுபேராக இருக்கவேண்டும். மேலும் நாம் வாசிப்பது -
அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும்.. இது அந்நிய பாஷைபேசுவதென்பது தனித்தனியாக, அதாவது "***ஒருவர்பின் ஒருவராக***" பேசவேண்டுவதைக் குறிக்கிறது.

அவர்கள் மூவரும் ஒரே நேரத்தில் சேர்ந்து பேசுவதற்கு ஒருபோதும் அனுமதியில்லை.
மேலும் நாம் வாசிப்பது -

"ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்"

பேசப்பட்ட அந்நிய பாஷையை விளக்கிச் சொல்வதற்கு ஒருவர் இருக்கவேண்டியது அவசியம். ஒருவேளை பேசுகிறவர்கள் -

"அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால் சபையிலே பேசாமல்.." இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் இவ்விஷயத்தில் கண்டிப்புடன் எழுதியிருந்தனர்.

ஆதிகால சபையில் அந்நியபாஷை பேசப்பட்டதன் காரணத்தைக் காண்போம் -

1கொரிந்தியர் 14:6,26

"மேலும் சகோதரரே நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?

"நீங்கள் கூடிவந்திருக்கும்போது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான். ஒருவன் போதகம் பண்ணுகிறான். ஒருவன் அந்நியாபாஷைகளைப் பேசுகிறான். ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான். ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது"

ஆம். ***"அந்நிய பாஷைபேசுதல்"*** என்பது, புதிய ஏற்பாடு இன்னும் எழுதப்படாத காலத்தில், சபையினுடைய பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது ஆவிக்குரிய வளர்ச்சிக்கான தேவனுடைய வார்த்தைகள் மற்றும் போதனைகள் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக வெளிப்பாட்டு முறையாகும்.

இங்கு 'அந்நியபாஷை பற்றின விஷயத்தில்.. தவறாக புரிந்துகொள்வதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியதைக் காண்போம்.

1கொரிந்தியர் 14:2

"அந்நியபாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்"

இன்று அந்நிய பாஷையில் பேசுகிறவர்கள், தேவன் மாத்திரம் அறிந்திருக்கிற, அதேசமயம் சாத்தானால் புரிந்துகொள்ளமுடியாத பாஷையை தாங்கள் பேசுவதாக நிரூபிப்பதற்கு பயன்படுத்துகிறார்கள்.

இதன்மூலம் அந்நிய பாஷைகளில் பேசுவதற்கு வைராக்கியம் பாராட்டி, அநேகர் பேருந்துகளில் பிரயாணம்செய்யும்போதும்,சாலையோரங்களில் நடக்கையிலும்,வீட்டில் ஓய்ந்திருக்கையிலும் பேசுவதைக் காண்கிறோம்.

இவையனைத்தும் உண்மையா? வேத வசனங்கள் இதை நமக்கு போதிக்கிறதா?

வேத வசனங்கள் போதிப்பதில் நாம் கவனிப்பது - அந்நிய பாஷைபேசுகிற ஒருவர் அறியப்படாத பாஷையை பேசுவதாக கூறுகிறது.

இது தமிழ் அல்லது ஆங்கிலம் மாத்திரம் அறிந்திருக்கிற சபையார் மத்தியில், ஒருவர் சீன மொழியிலோ அல்லது ஜப்பானிய மொழியிலோ பேசும்பொழுது ஏற்படுகிற அனுபவத்தை குறிக்கிறது.

மேலும் நீங்கள் சபையாரைப் பார்த்து.. அவர் என்னபேசினார்? என்றுகேட்டால்.. அதற்கு அவர்கள் அனைவரின் பதிலும் - ***"தேவனுக்குத்தான் தெரியும்"*** என்று சொல்வார்கள். அது உண்மைதான். ஏனெனில் தேவன் ஒருவரே அனைத்து பாஷைகளையும் அறிந்திருக்கிறார். மேலும் அவரே அனைத்து பாஷைகளையும் நமக்குத் தந்தவர் என்பதை பின்வரும் வசனம் கூறுகிறது -

ஆதியாகமம் 11:6,7

"அப்பொழுது கர்த்தர் - இதோ ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள். இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்"

தேவனுக்கென்று தனிப்பட்ட பாஷை ஏதுமில்லை. மாறாக அவரே அனைத்து பாஷைகளுக்கும் மூலகாரணராக இருக்கிறார்.

மேலும் ***"அந்நிய பாஷைகளைப் பேசுவது"*** அவிசுவாசிகளுக்கான அடையாளமாக இருப்பதை பின்வரும் வசனங்களில் வாசிக்கிறோம் -

1கொரிந்தியர் 14:22

"அப்படியிருக்க அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது"

ஆம். "அந்நியபாஷையில் பேசுவது" அவிசுவாசிகளுக்கான ஒரு அடையாளமாகும். ஆனால் இன்று இது விசுவாசிகளுக்கான அடையாளம்போல் நடைபெறுவது ஆச்சரியமே. ஆனால் ஆதிகாலசபையில் இவ்வாறு இருக்கவில்லை என்பதை வாசிக்கிறோம் -

அப்போஸ்தலர் 2:8,12

"அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷையிலேஇவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்"

ஆம். இது அவிசுவாசிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மேலும் அது அவர்களுக்கு தேவனுடைய

மிகப்பெரும் வல்லமையின் வெளிப்பாடாக இருந்தது. இங்கு பவுல் அப்போஸ்தலன் அதிகபட்ச பாஷைகளை(மொழிகளை) பேசியிருப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

1கொரிந்தியர் 14:18

"உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்"

அதுபோலவே, இந்தியாவில் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களில் மிகப்பெரிய ஊழியம் செய்த அப்போஸ்தலர் தோமாவும், தமிழ் மற்றும் மலையாளபாஷைகளில் பேசும் வரம் பெற்றவராக இருந்திருக்கவேண்டும்.

இருந்தபோதிலும், சபைகூடிவரும்போது, விசுவாசிகளுக்கு மத்தியில் இந்த பாஷைகளைப் பேசுவதை ஒருவரும் புரிந்துகொள்ளமுடியாத பட்சத்தில், இந்த வரத்தைப் பயன்படுத்துவதை பவுல் நிராகரிப்பதை பின்வரும் வசனத்தில் காண்போம் -

1கொரிந்தியர் 14:9,23

"அதுபோல்,நீங்களும் தெளிவான பேச்சைநாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே"

"ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும்அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால் அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?

சபையில் அனைவரும் கூடிவந்திருக்கையில் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து அந்நிய பாஷைகளில் பேசுவதைக் குறித்து பவுல், அவ்வாறு செய்யக்கூடாது என்று கூறுகிறார். ஏனெனில் நம் தேவனைக் குறித்து நாம் வாசிக்கையில் -

1கொரிந்தியர் 14:33

"தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது"

அவ்வாறே பிரசங்கி பழையஏற்பாட்டில் கூறியிருப்பதையும் வாசிக்கையில் -

பிரசங்கி 5:1,2

"நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள். மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச்சேர்வதே நலம்.. தேவ சமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு"

ஆம். தேவனுடைய சமுகத்தில் ஒருவர் உண்மையான பயபக்தியோடு நடந்துகொள்ளவேண்டும். எல்லோரும் சேர்ந்து ஒரே சமயத்தில் பாஷைகளை பேசுவது ஒருவருக்கும் பிரயோஜனமாயிராமல் கூச்சலும் குழப்பமுமாயிருக்கும்.

இவைகளைத் தவிர, இந்த "***அந்நிய பாஷைகளில்***" பேசுகிற வரமானது நிரந்தரமா?

வாசிப்போம் -

1கொரிந்தியர் 13: 8 ***"அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோம்"***

இங்கு ***"ஒய்ந்துபோம்"*** என்கிற வார்த்தை, முடிவுக்கு வரும் என்பதைக் குறிக்கிறது. இவ்வாறு இந்த பரிசுத்தஆவியின் வல்லமைஅல்லது வெளிப்பாடு, பின்னாளில் காணப்படாமற்போகும் என்பதை வசனங்கள் தெரிவிக்கின்றன.

அதுஏன்? ஏனெனில் பரிசுத்தஆவியின் இந்த ***"வரங்கள்"*** அப்போஸ்தலனாகியஒருவர் மூலமாகவே ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அருளக்கூடியதாக இருந்ததை நாம் வாசிக்கிறோம் -

அப்போஸ்தலர் 10:40,44

"மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார்"

மற்றொரு வசனத்தில் வாசிக்கையில் -

அப்போஸ்தலர் 8:14-17

"சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்"

மேலும் இதைக் குறித்து மற்றொரு வசனத்தில் வாசிக்கையில் -

அப்போஸ்தலர் 19:6

"அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்"

இங்கு தெளிவாக உரைத்திருப்பதைக் காண்கிறோம். எனவே, அப்போஸ்தலர் அனைவருடைய மரணத்திற்குப் பின்பு பரிசுத்தஆவியின் இந்த ***"வரம்"*** முடிவுக்கு வரும்.

"அந்நிய பாஷை பேசும் வரம்" ஆதிகால சபைக்கு கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன?

1. கர்த்தருடைய மாபெரும் கட்டளையை நிறைவேற்றுவதற்கு -

மத்தேயு 28:19

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து.."

அப்போஸ்தலர்களோ எபிரேய அரமாயிக் மற்றும் கிரேக்க பாஷைகளை மட்டுமே அறிந்திருந்தனர். ஆனால் அனைத்து தேசங்களுக்கும் சுவிசேஷத்தை அவரவர் பாஷையில் பிரசங்கிப்பது அவசியமாயிருந்தது.

2. **மேலும் அந்நிய பாஷை பேசுவது** புதிய ஏற்பாடு எழுதப்படாத காலகட்டத்தில் தெய்வீக வெளிப்பாடுகளை போதித்து ஆதிகாலசபையை வழிநடத்த தேவனால் பயன்படுத்தப்பட்டதை வாசிக்கலாம் -

1கொரிந்தியர் 14:6

"மேலும் சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?"

இங்கு தெளிவாக கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இப்படியிருக்க, இன்றைய நாட்களில் நாம் பார்க்கிற 'அந்நிய பாஷை பேசுதல்" குறித்து நாம் என்ன சொல்லுவோம்?

- அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைக்குதலின்மூலம் தரக்கூடிய வரம் , 1700 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் எப்படி திடீரென்று தோன்றியது?
- இங்கு பேசப்படுகிற அந்நிய பாஷை, வியாக்கியானம் செய்பவர் இல்லாமல், 1கொரிந்தியர்14:28 வசனத்திற்குக் கீழ்ப்படியாதபடி பேசப்படுவது ஏன்?
- 1கொரிந்தியர் 14:27ல் சொல்லப்பட்டதுபோல், "மிஞ்சினால் மூன்றுபேர் மட்டில்" பேசுவதற்கு பதிலாக 'ஒரே நேரத்தில்" எல்லோரும் சேர்ந்து அந்நிய பாஷைபேசுவது ஏன்?
- மேலும் இன்றைய அந்நிய பாஷைகள் பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததுபோல அவிசுவாசிகளுக்கு அடையாளமாக இல்லாமல் இருப்பதுஏன்?

இன்றுஅந்நிய பாஷைபேசுபவர்களின்போதனைகள் வேதத்தின் அடிப்படையில் அமைந்த போதனைகளா என்றும், அவை மகா பரிசுத்தமான விசுவாசமா(யூதா 24) என்றும் சோதித்துப் பாருங்கள். உதாரணம் - ஆத்மா, நரகம், திரித்துவம் போன்ற போதனைகள்.

இப்பொழுது நாம் பரிசுத்தஆவியின் மற்றொரு "***வரத்தை***" குறித்து காணலாம்

அற்புதங்கள் / சுகமளிக்கும் வரங்கள்



இது நோய்களைகுணமாக்குவதற்கு தேவனுடைய 'வல்லமையை" பிரயோகிப்பதாகும். இதன்மூலம்

-சரீரம் மற்றும் மனநோய்களிலிருந்து

-அசுத்த ஆவிகளிடமிருந்தும்

-மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவதும்கூட நிறைவேற்றப்படுகிறது.

பரிசுத்தஆவியின் "***வரம்***" ஆதிகால சபையில் அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்களால் பிரயோகிக்கப்பட்டது. இங்கு சில உதாரணங்களைக் காண்போம் -

அப்போஸ்தலர் 5:15,16

"பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்தஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்"

அப்போஸ்தலர் 6:8

"ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்"

அப்போஸ்தலர் 9:40

"பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி - தபீத்தாளே எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்"

இந்த வசனங்கள் அனைத்தும் பரிசுத்தஆவியின் "வரமாகிய"குணமாக்குதல் மற்றும் அற்புத அடையாளங்கள் செய்வதன் ஆதாரங்கள். இவையனைத்தும் ஆதிகால சபையில் அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்களால் நடத்தப்பட்டது. ஆனால் இவையனைத்தும் அவிசுவாசிகளுக்கும்,பொதுஜனங்களிடத்திலுமே நடப்பிக்கப்பட்டது. மாறாக ஒருபோதும் கிறிஸ்தவ விசுவாசிகள் மீதல்ல.

இந்த வல்லமையானது ஒருபோதும் அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் தங்களுக்காக நடப்பித்துக்கொள்ளவில்லை.

1தீமோத்தேயு 5:23

"நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்"

இது தீமோத்தேயுவுக்கு இருந்த வயிற்றுப் பிரச்சனைக்கு "கொஞ்சம் திராட்ச ரசத்தை" இயற்கை வைத்தியமாக பயன்படுத்த பவுல் எழுதியதாகும். இங்கு அவர்.. தீமோத்தேயுவின்மீது கைகளைவைத்து அற்புதமான முறையில் அவரை குணப்படுத்த எந்த பிரயாசமும் எடுக்கவில்லை என்பதை கவனிக்கவும். அதே சமயம் அவருக்கு "உருமால்களை"கூட குணமாக்கும் நோக்கோடு மற்றவர்களுக்கு அனுப்பியதுபோல் அனுப்பவில்லை என்பதை கவனிக்கவும் -

அப்போஸ்தலர் 19:12

"அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின. பொல்லாத

ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன"

இதன்மூலம் ஆதிகால சபையின் கிறிஸ்தவர்கள் அற்புதங்களை நடப்பிக்கிற இந்த வல்லமையை
- அவிசுவாசிகளுக்கான அடையாளமாக மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்று அறிந்திருந்ததையும்,
- மாறாக தங்களுக்காக அல்ல என்பதையும் உணர்ந்திருந்ததை நாம் காண்கிறோம்.

ஆனால் இன்று குணமாக்கும் வரங்கள்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதை காண்கிறோம்.

மேலும், "***உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காக கொஞ்சம் திராட்சை ரசம் சேர்த்துக்கொள்***"என்ற இவ்வசனத்தை, மது அருந்துவதற்கான அங்கீகாரமாகக் கொண்டு, அநேக கிறிஸ்தவர்கள் தினந்தோறும் கொஞ்சம் மது அருந்துவதைக் காண்கிறோம். ஆனால் பவுல் தீமோத்தேயுவின் வயிற்று உபாதைகளுக்கு மருத்துவ ரீதியாக பயன்படுத்தவே குறிப்பிட்டிருந்தார் என்று நாம் காண்கிறோம்.

மேலும் மரித்தவர்களை அப்.பேதுரு மற்றும் அப்.பவுல் எழுப்பிய சம்பவத்தையும் நாம் காண்கிறோம் :

தபீத்தாள் என்ற சீஷி நற்கிரியைகளையும்தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தவள், வியாதிப்பட்டு மரித்தாள். பேதுரு இதை அறிந்து, அங்கு சென்று, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தில் புறமாய்த் திரும்பி - தபீத்தாளே எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்...இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்(**அப்போஸ்தலர் 9:36-42**).

அப்போஸ்தலர் பவுலால் ஐத்திகு என்ற வாலிபன் உயிர்த்தெழுப்பப்பட்ட சம்பவத்தை **அப்போஸ் 20:9-12** இல் காண்கிறோம்.

இவை அனைத்தும் கர்த்தருடைய மகிமையையும் வல்லமையையும் பிரஸ்தாபப்படுத்தவும்.. தங்கள் போதகரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களுக்கு சுவிசேஷ நற்செய்தியை எடுத்துச்சொல்லவும் நடப்பிக்கப்பட்டது.

ஆனால் இந்த அற்புதங்களைக் கண்டு ஒருவர் இயேசுவை விசுவாசித்து சீஷராவதற்கு அடிப்படையாக கருதப்படவில்லை.

மேலும் இப்படிப்பட்டவர்கள் தம் சீஷராவதற்கு கர்த்தர் விரும்பவில்லை என்பதை வாசிக்கலாம் -

யோவான் 2:23-25

"பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால்,மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை"

ஆம்.அற்புதங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த விசுவாசம் இயேசுவின் நாட்களிலிருந்து

இன்றுவரை அதிக அளவில் காணப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு இது ஆதாரமாக இருக்கக்கூடாது என்பதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம் -

2கொரிந்தியர் 5:6 "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்"

இவ்விதமாக அற்புத அடையாளங்களை எதிர்பார்க்கிற கிறிஸ்தவர்களைக் குறித்த கர்த்தர் பேசின தீர்க்கதரிசன வசனங்களை நாம் வாசிக்கையில் -

மத்தேயு 7:22,23

"அந்நாளில் அநேகர் என்னை நோக்கி - கர்த்தாவே கர்த்தாவே, உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை . அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்"

அந்நாளில் - நியாயத்தீர்ப்பின்நாளில் கிறிஸ்தவர்களில் அநேகர், இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்ததைகுறித்து பேசுவதை கர்த்தர் விவரிக்கிறார். இங்கு கர்த்தாவே கர்த்தாவே என்று இரண்டு முறை உச்சரிக்கப்படுவது,பெயர் கிறிஸ்தவ மண்டலத்தின் இரண்டு பிரிவுகளாகிய ரோமன் கத்தோலிக்கம், மற்றும் புராட்டஸ்டன்ட் சபைகளைக் குறிக்கிறது.

இவர்கள் இருவரும் இயேசுவின் நாமத்தில் அற்புத அடையாளங்களை நடப்பித்ததாகக் கூறுவார்கள். ஆனால் அவர்களைத் தான் அறியவில்லை என்றும், அவர்கள் செய்த அற்புத அடையாளங்களை - "***அக்கிரமச் செய்கை***" என்றும் கர்த்தர் கூறுவார். இவர்களை தம் ஊழியக்காரர்களாக அங்கீகரிக்கமாட்டார்.

இது ஏன்? இந்த அற்புத அடையாளங்கள்இயேசுவின் நாமத்தில் , இயேசுவின் வல்லமையில் நடத்தப்படவில்லையா?

இக்கேள்விக்கான விடை இயேசுகிறிஸ்துவின் நாட்களில் நடப்பிக்கப்பட்டஅற்புதங்களின் பின்னணியில் இருப்பதை வசனத்தில் வாசிப்போம் -

மாற்கு 9:38-40

"அப்பொழுது யோவான் அவரை நோக்கி - போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம். அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான்.அதற்கு இயேசு - அவனைத் தடுக்கவேண்டாம். என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்"

இது இயேசு கிறிஸ்துவின் சீஷன் அல்லாத, அவரை அறியாதவனுமான ஒருவன், இயேசுவின்

நாமத்தில் அற்புதங்கள் செய்ததாக பதிவுசெய்யப்பட்டுள்ள வசனப் பகுதியாகும். அவனை அப்போஸ்தலர்கள் தடுத்தபோதும் இயேசு,
"அவனைத் தடுக்கவேண்டாம், என் நாமத்தினால் அற்புதம்செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்து தீங்கு சொல்லமாட்டான்" என்று கூறி அனுமதித்ததைக் காண்கிறோம்.

இன்று அநேகர் இவ்வசனத்தை இன்றைய அற்புத அடையாளங்களை நியாயப்படுத்த ஆதாரமாக எடுக்கின்றனர்.

இயேசுவின் இந்த வார்த்தைகளை இன்று நாம் பிரயோகிக்கலாமா?
இதற்கு இயேசு தாமே பதில் அளிப்பதைக் காண்கிறோம் -

மத்தேயு 24:24,25

"ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்"

இங்கு கள்ளத்தீர்க்கதரிசிகள் - கள்ள சபை அமைப்புக்களையும்
கள்ள தீர்க்கதரிசிகள் - கள்ளபோதகர்களையும் குறிக்கிறது.

இப்படியிருக்கையில் இயேசுவின் நாமத்தில் நடப்பிக்கப்படுகிற இந்த அற்புதங்களைச் செய்வது யார்?
இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

2கொரிந்தியர் 11:14

***"அது ஆச்சரியமல்ல, சாத்தானும்
ஒளியின் தூதனுடைய வேஷத்தைத்
தரித்துக்கொள்வானே"***

இந்த அற்புதங்களை ***"ஒளியின் தூதனாக"*** வேஷந்தரித்து அல்லது வேறொரு இயேசுவாக மாறி நடப்பிக்கிறான். அதை வேறொரு ***"இயேசுவின் நாமத்திலும்" ..."வேறொரு ஆவியின்"*** வல்லமையினாலும் நடப்பிக்கிறான்.

மேலும் கிறிஸ்தவர்கள் அனைவரும் வஞ்சிக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தில் உள்ள அறிவுக்குறைவினால், இந்த அற்புதங்களை தேவ சித்தம் என்றே நினைக்கின்றனர்.

இந்த உண்மை பின்வரும் வசனத்தின்மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது -

2தெசலோனிக்கேயர் 2:9

"அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்..."

இந்த அற்புதங்கள் அனைத்திலும் சாத்தான் தன் ***"எல்லா வல்லமையையும்"*** வெளிப்படுத்துவதாக

நாம் வாசிக்கிறோம். இந்த "***பொய்யான அற்புதங்களில்*** " வெளிப்படுகிற வல்லமை இயேசுவின் வல்லமையே அல்ல என்பதே உண்மையாகும்.

மேலும் இதற்கு ஆதாரமாக -

2தெசலோனிக்கேயர் 2:10,11

"கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்.ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு.."

ஆம்.இந்த பொய்யான அற்புதங்களில் உள்ள கொடிய வஞ்சகத்தை தேவனே அனுமதிப்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

எனவே, ஆதிகால சபையில் பெரிய அற்புதங்கள் அனுமதிக்கப்பட்டாலும், அவை சபையில் விசுவாசத்தை ஸ்தாபிப்பதற்காக குறுகிய காலம் மட்டுமே அதாவது புதிய ஏற்பாடு எழுதித்தீரும்வரை அனுமதிக்கப்பட்டிருந்தது.

பின்பு அற்புதங்கள் மற்றும் குணமாக்குகிற அடையாளங்கள் முடிவுக்குவரும் என்று காண்கிறோம்.

அடுத்து நாம் பரிசுத்தஆவியின் மற்றொரு வரம் அல்லது வெளிப்பாடு குறித்து காண்போம் -

தீர்க்கதரிசனம் உரைத்தல்

இன்று அநேக சபைகளில் குறிப்பிட்ட நேரங்களில், தீர்க்கதரிசன ஞாயிறு என்று அழைக்கப்படுகின்ற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் ஒரு 'தீர்க்கதரிசி" வந்து...கண்களை மூடி தீர்க்கதரிசனம் உரைக்கத் துவங்குவார்.

அவர் தனிப்பட்ட நபர்களுடைய எதிர்கால வாழ்க்கையில் சம்பவிப்பவைகளை
- திருமணம் - பிள்ளை பெறுதல் - மரணம் -
- சில சமயங்களில் சுவிசேஷ ஊழியத்திற்கு அழைக்கப்படுதல் போன்றவைகளை குறித்து தீர்க்கதரிசனமாக உரைப்பார்.
- சிலருடைய வியாதிகளை அடையாளங்கண்டு அவைகள் குணமாக்கப்படுவதைக் குறித்துப்பேசுவார். இந்த விபரங்கள் அனைத்தும் தேவனிடமிருந்து பெறப்படுவதாக சொல்லப்படுகிறது.



வேத வசனங்கள் கூறும் தீர்க்கதரிசனத்தின் விளக்கம் இது தானா? - பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம் -

வெளிப்படுத்தல் 19:10

"இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்"

இவ்வசனம் தீர்க்கதரிசனத்தின் உண்மையான விளக்கத்தை நமக்குத்

தருகிறது. தீர்க்கதரிசனம் என்பது " ***இயேசுவைப் பற்றின சாட்சி"*** என்று விளக்குகிறது. அது - இயேசுவைப்பற்றி சொல்லப்பட்ட நான்கு சுவிசேஷத்தின் சாட்சியாக இருக்குமோ? இதற்கான பதிலை இயேசுவிடமிருந்தே நாம் பெறலாம் -

லூக்கா 24:27

"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்"

இங்கு மோசே என்பது ***ஆதியாகமம்/ யாத்திராகமம்/ லேவியராகமம்/ எண்ணாகமம்/ உபாகமம்*** ஆகிய ஐந்து புத்தகங்களைக் குறிக்கிறது. இவையனைத்தும் மோசே மூலமாக எழுதப்பட்டு, யூதர்களால் "***தோரா***" என்று அழைக்கப்படுகிறது. இங்கு, வேதமானது மோசே எழுதின ஐந்து புத்தகங்களில் துவங்குவதாக இயேசு உறுதிப்படுத்துவதை தயவுசெய்து கவனிக்கவும்.

இயேசுவைப் பற்றின சாட்சியானது வேதத்தில்
- தேவன் சிருஷ்டிப்பு வேலைகளில் தம்மோடு உடன் சிருஷ்டிகராக இயேசு இருந்ததை கூறுவதிலிருந்து துவங்குகிறது

ஆதியாகமம் 1:26 ***"நமது சாயலில் .. உண்டாக்குவோமாக"***

பின்பு, ஆதாமிடம் பேசுகிற தேவனாகிய கர்த்தர் 'தேவனுடைய வார்த்தையுமான" நமது இயேசுவே ஆவார்(ஆதியாகமம் 2:17)

மேலும், இஸ்ரயேலரின் வனாந்தரப் பயணத்தில் அவர்களை வழிநடத்துவதற்கு'ஒரு தூதனை" அனுப்புவதாக தேவன் பேசுவதைக் காண்கிறோம்(யாத்திராகமம்23:20,21). அந்த தூதன் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்பதை ***1கொரிந்தியர்10:4*** ன் மூலம் உணருகிறோம்.

மேலும் "***நீங்கள்விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர்..***" என்று மல்கியா 3:1ல் குறிப்பிடப்பட்டது , இஸ்ரயேலரோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துகிற மேசியாவை குறிக்கிறது.

'இவ்விதமாக சொல்லிக்கொண்டே போகலாம். இறுதியில், வேதத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தின புத்தகத்திலிருந்து நாம் வாசிக்கையில் -

வெளிப்படுத்தல் 22:17

"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்.."

இது மகிமையடைந்த சபை அவர்களுடைய தலையும், இராஜாவும், ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவோடு இருப்பதைக் குறிக்கிறது.

ஆம். இந்த முழு வேதமும் தேவனுடைய தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுகிற 'தேவனுடைய தாசனாகிய"(ஏசாயா 52:13)இயேசுவைப்பற்றிய சாட்சியைக் கொண்டுள்ளது.

எனவே உண்மையான தீர்க்கதரிசனம் என்பது - "***இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக***"இருக்கும் வேதத்தின் சத்திய போதனைகளை உபதேசிப்பதாகும்.

இவ்விதமாக நாம் வாசிக்கையில் -

அப்போஸ்தலர் 2:18

"என்னுடைய ஊழியக்காரர் மேலும் , என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்"

ஆம் தேவனுடைய தெய்வீக திட்டத்தை பற்றின சத்தியங்களை பரிசுத்தஆவியின் மூலமாக மாத்திரமே வேத வசனங்களில் இருக்கிற பிரகாரம் புரிந்துகொள்ளமுடியும் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

1கொரிந்தியர் 2:14

"ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்"

மேலும் கள்ளத் தீர்க்கதரிசகள் மற்றும் கள்ளபோதகர்களைப் பற்றி வேதத்தில் நாம் வாசிக்கையில்

2பேதுரு 2:1-3

"கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களை... அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது"

மேலும் எழும் கேள்வி என்னவெனில் - ஒரு கள்ளத்தீர்க்கதரிசி அல்லது கள்ளபோதகரை நாம் எப்படி அடையாளங்காணமுடியும்? என்பதே

இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

1யோவான் 4:1

"பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்"

இங்கு ஆவிகள் என்று குறிப்பிடப்பட்டிருப்பது என்ன? நம் ஆரம்ப வகுப்புகளில் ஆவி என்பது கண்ணுக்குப் புலப்படாத வல்லமை என்று கண்டோம். மேலும் ***"ஆவி"*** என்ற வார்த்தைக்கு

1. ஜீவ சுவாசம் 2. சிந்தை 3. வார்த்தைகள்(போதனைகள்) என்ற மூன்று அர்த்தம் உண்டு என்றும் பார்த்தோம்.

பின்வரும் வசனத்தில் காண்கிறபடி ஆவி என்பது போதனையை (வார்த்தை) குறிக்கும்

யோவான் 6:63

"ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது.. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது"

இதன்மூலம் ***"ஆவிகளை சோதித்தறியுங்கள்"*** என்று சபையை அப்போஸ்தலனாகிய யோவான் எச்சரிப்பது - நாம் பெற்றுக்கொள்கிற போதனைகள் அனைத்தையும் சோதித்து, அவைகள்

தேவனிடத்திலிருந்தும் அவருடைய வார்த்தையிலிருந்தும் வருகின்றனவா என்று அறிவது அவசியம் என்று உணருகிறோம்.

இதற்கு முன் உதாரணமாக ஆதிகால சபையில் இருந்த கிறிஸ்தவர்களை நாம் காண்கிறோம் -

அப்போஸ்தலர் 17:11

"அந்த பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்"

இன்று நாமும் இந்த பெரேயா பட்டணத்தார் போல் இருந்தோமானால் கள்ளபோதகர்களிடமிருந்து காக்கப்பட்டிருப்போம்.

இதை தேவனுடைய வார்த்தைகளின்மூலம்அவருடைய உண்மையான தீர்க்கதரிசிகளை அடையாளம் காண்பதின்மூலம் செயல்படுத்தலாம்.
இப்பொழுது நாம் வெளிப்படுத்தின புஸ்தகத்தில் வாசிக்கிற ஒரு கள்ளத்தீர்க்கதரிசியைக்குறித்து காணலாம் -

வெளிப்படுத்தல் 16:13 / 19:20

"அப்பொழுது வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்தஆவிகள் புறப்பட்டுவரக்கண்டேன்"

அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது, மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களினால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்"

இந்த "***கள்ளத்தீர்க்கதரிசி***" யாரைக் குறிக்கும்?

இது வேதத்திலுள்ள உபதேசங்களை போதிக்கிற போதகர்களாக தங்களை பறைசாற்றி, உண்மையில் கள்ள உபதேசங்களை போதிக்கிற கள்ள தீர்க்கதரிசியாகிய ஒரு அமைப்பை அடையாளமாககுறிக்கிறது.
ஆம். இது புராட்டஸ்டன்ட் சபைகளின் ஒருங்கிணைப்பை அடையாளமாக குறிக்கிறது.
இந்த சபைகளின் "***அமைப்பு***" மற்றும் அவர்களுடைய கள்ளதீர்க்கதரிசனத்தை தேவன் பின்வருமாறு குறிப்பிடுகிறார் -

எரேமியா 23:21

"அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள். அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்"

மேலும் இவர்களைக் குறித்து ***எரேமியா 23:16,17/ 23:30-32*** எழுதப்பட்டுள்ளதையும் ஒப்பிட்டுப்

பார்க்கவும்.

இந்த கள்ளத்தீர்க்கதரிசிகளின் மீதான கர்த்தருடைய இறுதி நியாயத்தீர்ப்பை குறித்து **எரேமியா 23:40** இலும், இவை சம்பவிக்கும் விதத்தை **சகரியா 13:4-6** இலும் கூறப்பட்டுள்ளதை வாசித்துப் பாருங்கள்.

இப்பொழுது நாம் பரிசுத்த ஆவியின் கடைசியான "***வரம்***" குறித்து காண்போம் -

தரிசனம் பார்த்தல்



"***தரிசனங்கள்***" என்பது சில முக்கியமான ஆவிக்குரிய காரியங்களை அறிவிக்க தேவன் பயன்படுத்துகிற காணக்கூடிய காட்சிகளாகும். உதாரணம் - இயேசுகிறிஸ்துவின் மறுரூபக் காட்சி **(மத்தேயு17:1-9).**

மற்றும் .. பின்வரும் வசனத்தில் பேதுரு கண்ட தரிசனம் விளக்கப்பட்டுள்ளது -

அப்போஸ்தலர் 10:11-17

"வானம் திறந்திருக்கிறதாகவும், நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும் - பேதுருவே எழுந்திரு, அடித்துப்புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு - அப்படியல்ல ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக் குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வாசற்படியிலே வந்து நின்று"

இதுபோல பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடுகளில் இன்னும் அநேக தரிசனங்கள்பதிவாகி உள்ளது.ஆனால் இந்த தரிசனங்கள் என்பது இந்நாளில் -

- கர்த்தராகிய இயேசு காட்சியளித்து அந்த நபர்களிடம் பேசுவதாகவும்,
- பரிசுத்த ஆவியானவர் அந்த நபரை சந்திப்பதாகவும்
- பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நரகத்திற்கு சென்று பார்ப்பதாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது.

இவையனைத்தும் வசனத்தின் அடிப்படையில் உண்மையா? இந்தக் காரியங்களை ஒவ்வொன்றாக காண்போம் -

1. இயேசு காட்சியளித்தல் அல்லது அவருடைய "தரிசனங்கள்"

அப்போஸ்தலர் 9:5-9 வசனங்களில் கர்த்தராகிய இயேசுவை அவருடைய தற்போதைய மகிமையின் நிலைமையில் கடைசியாக பார்த்தவர் தரிசு பட்டணத்தின் சவுல் என்பதை அறிவோம். அவருக்கு நேர்ந்ததை குறித்து நாம் வாசிப்பது என்ன? அவர் குருடாக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு புசிக்கவும், குடிக்கவும் முடியாமல்போனதை அறிவோம்.

இதற்கு என்ன காரணம்?

கர்த்தராகிய இயேசு காட்சியளித்தது மத்தியான வேளையில் சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளியாக - கண்களை கூசச்செய்கிற ஒளியாக இருந்தது. தேவனுடைய மிகப்பெரிய ஊழியனுக்கே இப்படிப்பட்டஅனுபவம் நேர்ந்திருக்க, இன்றைய தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் கர்த்தரை தரிசனத்தில் கண்டும், அவர்களுக்கு ஒன்றும் சம்பவியாமலிருப்பது எப்படி?

2. பரிசுத்த ஆவியானவர் என்ற நபரை சந்திக்கிற "தரிசனங்கள்"

தேவனுடைய பரிசுத்தஆவி என்பது கர்த்தராகிய இயேசு நமக்கு போதித்திருக்கிறபடி, அது 'உன்னதத்திலிருந்து வரும் பெலன்"ஆகும்(லூக்கா 24:49). தேவனுடைய கண்ணுக்குத் தெரியாத அளவிடமுடியாத வல்லமையாகும். மாறாக அது ஒரு நபர் அல்ல.

3. பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நரகத்தையும் "தரிசித்தல்"

1கொரிந்தியர் 15:50

"சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில்,
மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது.."

மனித ரூபத்தில் இருக்கிற ஒருவரும் பரலோகத்திற்கு ஒருக்காலும் போகமுடியாது. ஆனால் சிலர் பின்வரும் வசனத்தை மேற்கோள் காட்டி வாதம் செய்யலாம் -

2கொரிந்தியர் 12:2

"கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன். அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான். அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன், தேவன் அறிவார்"

இவ்வசனமானது "***பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது***" சம்பந்தமான அனைத்து அனுபவங்களையம் நியாயப்படுத்துகிற ஆதார வசனமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இங்கு "***மூன்றாம் வானம்***" என்பது இயேசு சிலுவையிலிருந்த கள்ளனுக்கு வாக்களித்த பரதீசாகிய தேவனுடைய இராஜ்யமாகும்.

இது நீதி வாசமாயிருக்கும் மூன்றாவது உலகம்(2பேதுரு 3:13). இந்த மூன்றாம் உலகத்தில் பூமி ஏதேன் தோட்டத்தைப்போல சீர்பொருந்தப்பட்டு, ஒரு பரதீஸ்போல இருக்கும்(யோயேல் 2:3).

மேலும் ஆத்துமாக்கள் நித்தியத்திற்கும் அக்கினியில் வதைக்கப்படுகிற வேதனை ஸ்தலமாகிய நரகத்தைப் பற்றின "*தரிசனத்தை*"குறித்த போதனைகளும் வேதத்தில் காணப்படாதவைகளாகும்.

வேதம் ஆத்மாக்கள் நரகத்தில் அழிக்கப்படுவதாக போதிக்கிறது -

மத்தேயு 10:28

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்"

இறுதியாக, இந்த காரியங்கள் அனைத்தையும் குறித்த பெயர்சபையின் போதனைகள் , முற்றிலும் தவறானதும், தேவனுடைய வார்த்தைகளில் போதிக்கப்படாததும், வேதத்தில் காணப்படாததுமாக இருக்கிறதை நாம் கண்டோம்.

எனவே இக்காரியங்கள் அனைத்தையும் குறித்த கர்த்தருடைய வார்த்தைகளாக நாம் இன்று கண்டறிந்ததின்மூலம் நிறைவு செய்வோம் -

எரேமியா 14:14

"அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி - தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை. அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை. அவர்களோடே பேசினதுமில்லை. அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும் இல்லாத விசேஷத்தையும் , தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்"

நம்மை விடுதலைசெய்த தேவனுடைய சத்தியத்திற்காக அவருக்கு நாம் நம்முடைய நன்றிகளை ஏறெடுப்போம் ஆமென்.

இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/